**28.** ராபர்ட் காக்னே என்பவரது கூற்றுப்படி கற்றல் என்பது ____________ படிநிலைகளை கொண்டது

A 5 B 7 C 8 D 6

Robert Gagne's theory of Hierarchial learning includes _________ types of learning

A 5 B 7 C 8 D 6

**29.** நினைவின் முக்கிய இரண்டு வகைகள்

A STM & LTM B ATM & GTM C LTM & ATM D ATM & STM

The two types of memory are

A STM & LTM B ATM & GTM C LTM & ATM D ATM & STM

**30.** VIBGYOR என்பது ____________ என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு

A சுருங்க கற்றல் B நினைவு சூத்திரங்கள் C எளிய கற்றல் D மோனிக்ஸ்

VIBGYOR is a good example of

A abbrevation B Mnemonics C easy learning D monics

ii. Language I – **தமிழ் – Tamil**

**கீழ் உள்ள பத்தியைப் படித்து 1 முதல் 3 வரை உள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

தமிழ் நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கினர். தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் என்றும் பொருள் உள்ளது. நேர்க்கோடு, கோணக்கோடு, வளைகோடு கொண்டு வரையப்பட்ட ஓவியங்கள் கோட்டோவியங்கள் எனப்படும். ஓவியர்கள் எண்ணங்களின் எழுச்சியை பல வண்ணங்களின் துணை கொண்டு எழுதுவோராதலின் கண்ணுள் வினைஞர் எனப்பட்டனர். ஆண் ஓவியர் 'சித்தராங்கதன்' எனவும், பெண் ஓவியர் 'சித்திரசேனா' எனவும் அழைக்கப்படுவர்.

**31.** வளைகோடுகள் கொண்டு வரையப்படுவது

A எழுதா ஓவியம் B கோட்டோவியம்

C புனையா ஓவியம் D பாவை ஓவியம்

**32.** 'கண்ணுள் வினைஞர்' என்றழைக்கப்படுபவர்

A புலவர் B பாடகர்

C நாட்டியக்காரர் D ஓவியர்

33. ‘பெண் ஓவியர்கள்’ இவ்வாறு அழைக்கப்படுவர்

A சித்திரசேனா　　B சித்திராங்கதன்
C சித்திரப்பாவை　　D சித்திரக்காரப் புலி

34. ‘நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா’ என்று யார் யாரைப் பாடினார்

A பாரதிதாசன் பாரதியை　　B பாரதி பாரதிதாசனை
C வாணிதாசன் பாரதியை　　D பாரதி வாணிதாசனை

35. பின்வருவனவற்றில் சரியான வரிசையைத் தேர்வு செய்க.

A பேதை, மங்கை, மடந்தை, பெதும்பை
B பேதை, மடந்தை, பெதும்பை, மங்கை
C பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை
D பேதை, மங்கை, பெதும்பை, மடந்தை

36. தன் கல்லறையின் மீது, ‘தன்னை ஒரு தமிழ் மாணவன்’ என்று எழுதச் சொன்னவர்

A கால்டுவெல்　B வீரமாமுனிவர்　C ஜி.யூ. போப்　D யுரேனிஸ் பாரதியார்

37. கலம்பகத்தின் உறுப்புகள்

A 10　B 14　C 8　D 18

38. ‘குடிமக்கள் காப்பியம்’ என்று அழைக்கப்படும் நூல்

A சிலப்பதிகாரம்　B மணிமேகலை　C சீவகசிந்தாமணி　D வளையாபதி

39. ‘சிறந்த பத்தை’ தன்னகத்தே கொண்ட நூல்

A முத்தொள்ளாயிரம்　　B முதுமொழிக் காஞ்சி
C அடைக்கலப் பத்து　　D பதிற்றுப்பத்து

40. காலங்கரந்த பெயரெச்சம்

A வினைமுற்று　　B ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்
C வினைத்தொகை　　D ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்

41. ‘இசையமுது’ என்ற நூலை இயற்றியவர்

A பாரதியார்　B பாரதிதாசன்　C நாமக்கல் கவிஞர்　D சுரதா

42. “தானம் வாங்கிடக் கூசிடுவான்
தருவது மேல் எனப் பேசிடுவான்” – என்னும் வரிகளைப் பாடியவர்

A கவிமணி　　B நாமக்கல் கவிஞர்
C புரட்சிக் கவிஞர்　　D உவமைக் கவிஞர்

43. ல, ழ, ள – இம்மூன்று எழுத்துகளும் ஒரே மாதிரி ஒலிப்பது

A மயங்கொலிப் பிழை　　B சந்திப் பிழை
C எழுத்துப் பிழை　　D ஒலிப்புப் பிழை

44. ‘தூரத்து ஒளி’ என்னும் சிறுகதையின் ஆசிரியர்

A நாஞ்சில் நாடன்　　B வா.வே.சு. ஐயர்
C கா.கௌ. முத்தழகர்　　D சி.சு. செல்லப்பா

45. 'நாள்தோறும் உடற்பயிற்சி செய்' என்பது எவ்வகைத் தொடர்

A கட்டளைத் தொடர் B செய்தித் தொடர்

C உணர்ச்சித் தொடர் D உடன்பாட்டுத் தொடர்

46. முதல் பரணி நூல்

A பாசவதைப் பரணி B இரணியவகைப் பரணி

C கலிங்கத்துப்பரணி D தக்கயாகப்பரணி

47. 'திரைக்கவித் திலகம்' என்று நாம் யாரைக் குறிப்பிடுகிறோம்

A உடுமலை நாராயண கவி B கு.மா. பாலசுப்பிரமணியம்

C அ.மருதகாசி D பாபநாசம் சிவம்

48. முச்சீரால் வரும் அடி

A குறளடி B அளவடி C சிந்தடி D நெடிலடி

49. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள புறநூல்

A இன்னா நாற்பது B களவழி நாற்பது

C இனியவை நாற்பது D கார் நாற்பது

50. 'சூளாமணி' என்னும் நூலின் ஆசிரியர்

A பெயர் தெரியவில்லை B நாதக்குத்தனார்

C தோலாமொழித் தேவர் D திருத்தக்கத்தேவர்

51. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர்

A திருத்தொண்டர் தொகை B சேக்கிழார் புராணம்

C திருத்தொண்டர் திருவந்தாதி D திருத்தொண்டர் புராணம்

52. 'மார்கழி பூத்தது'

A தொழிலாகு பெயர் B இடவாகு பெயர்

C சினையாகு பெயர் D காலவாகு பெயர்

53. எட்டுத்தொகை நூல்களில் அகமும், புறமும் கலந்த நூல்

A நெடுந்தொகை B பதிற்றுப்பத்து C பரிபாடல் D குறுந்தொகை

54. 'அரசன்' என்பதை 'அரைசன்' என்று கூறுவது

A இலக்கணமுடையது B மரூஉ

C இலக்கணப் போலி D இடக்கரடக்கல்

55. 'பொன்னகரம்' என்ற சிறுகதையின் ஆசிரியர்

A ஜெயகாந்தன் B புதுமைப்பித்தன்

C பிரபஞ்சன் D கு.பா. ராஜகோபாலன்

56. 'தமிழ் நாடகப் பேராசிரியர்' என்றழைக்கப்படுபவர்

A சங்கரதாஸ் சுவாமிகள் B பேறிஞர் அண்ணா

C ஆர்.எஸ். மனோகர் D பம்மல் சம்பந்த முதலியார்

57. புகழேந்திப் புலவரை ஆதரித்த வள்ளல்

A சந்திரன் சுவர்க்கி B சடையப்ப வள்ளல்
C சீதக்காதி D பாரி

58. 'கறுப்பு மலர்கள்' என்பது

A மரபுக் கவிதை B ஹைக்கூ C புதுக்கவிதை D லிமரைக்கூ

59. 'காவடிச் சிந்து' பாடியவர்

A அண்ணாமலையார் B மகாகவி பாரதியார்
C அரசஞ்சண்முகனார் D அருணகிரிநாதர்

60. வண்ணம் கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் வரைவது

A வட்டிகைப் பலகை B புனையா ஓவியம்
C வட்டிகைச் செய்தி D நடுகல் வணக்கம்

iii. ஆங்கிலம் – **English**

61. **Choose the correct phrase to fill in the blank in the sentence.**

She ____________ living in Chennai since 1989.

A have been B had been C have being D has been

**Fill in the blank with correct Homophone.**

62. I thought it might ______________

A reign B rein C ruin D rain

63. **Change the given verb into noun form :** Imagine

A imagination B imagined C imaginative D imaginary

**In each of the following sentences, an idiomatic expression or a proverb is highlighted select the alternative which best describes its use in the sentence.**

64. The police will leave no stone unturned to discover the murderer

A turn every stone B investigate thoroughly
C make no excuse D be indifferent

65. The concert was brought to a close with a display of fire works

A concluded B interrupted C announced D cancelled